R4841

# "LOVE CASTETH OUR FEAR"
# "அன்பு பயத்தை புறம்பே தள்ளும்"

வசனம் "அன்பிலே பயமில்லை" என்ற கருத்தை நன்றாக சொல்லியிருக்கிறது. நாம் அன்பு செலுத்துகிறவர்களை நாம் பயமுறுத்தமாட்டோம். எனினும் இன்னொரு பொருளில், நாம் அதிகமாக அன்பு செலுத்தினால் அதிகமாக பயப்படுவோம். நாம் அன்பு செலுத்தாதவர்களை பிரியப்படுத்த நாம் அக்கறை கொள்ளமாட்டோம். அப்போஸ்தலர் நம்மை நீக்கச் சொல்லுகிற பயம் இந்த வகையான பயம் அல்ல. மாறாக இது மிகவும் மேம்படுத்தப்பட வேண்டியது. பயம் என்ற வார்த்தை நமது வசனத்தில் மிகவும் துல்லியமாக அதன் கருத்தை சொல்லியிருக்கிறது.

"அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயமில்லை" என்று சிலரைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுகின்றன. (ரோமர் 3:18) இவர்கள் மீண்டும் உருவாக்கப்படாதவர்கள். பெரும்பாலும் மனிதர்களிடையே தேவனைப் பற்றியும் எதிர்காலத்தைக் குறித்தும் எண்ணமே இல்லாதிருக்கிறது. எல்லா இருதயங்களிலும் பயம் இருக்கிறது என்று இந்த வசனத்தில் அப்போஸ்தலர் கூறவில்லை. ஆனால் எந்த இருதயத்திலாவது பயம் இருந்தால் அன்பானது அதை நீக்கிவிடும். அறிவும் அன்பும் பெருகும் போது பயமானது குறைகிறது. உலகத்தாரில் பயபக்தியுடைய பயம் உடையவர்கள் விரும்பத்தக்க மனோபாவம் உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சிந்தனையற்றவர்களைக் காட்டிலும் நல்ல நிலையிலிருக்கிறார்கள். வாழ்க்கையில் நம்மை சுற்றியிருக்கிற குறிப்பிட்ட சூழ்நிலையில் பயபக்தி தேவையாயிருக்கிறது. ஒருவர் சீரழியாத நிலையில் இருந்தால் பயபக்தி என்பது மானசீக சுபாவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின ஆரம்பம்." (நீதிமொழிகள் 9:10) கர்த்தருக்கு பயப்படுதல், கர்த்தரிடம் உள்ள பயபக்தி ஆசீர்வாதத்தை கொண்டு வரும். கர்த்தருக்கு பயப்படுகிற பயம், தேவனுடைய பிள்ளையை அவரைப் பற்றி அதிகமாக தெரிந்துகொள்ளும், விருப்பத்தை அதிகரிக்கிறது. ஆனால் அது படிப்படியான ஒரு காரியம்.

அபூரணமான அறிவினால் ஒரு வகையான பயம் வருகிறதாயிருக்கிறது. மனித மனதில் வருகிற எல்லா தீமையான எண்ணங்களுக்கும் சத்துருவையே நாம் காரணம் சொல்ல முடியாது. ஆனாலும் அவன் நமது இனத்தை சுற்றி தீமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறவனாய் இருக்கிறான். ஜனங்கள் தேவ பயம் இல்லாதிருக்கக்கூடும். அவர்கள் கர்த்தரிடத்தில் வந்து அவரிடம் பயபக்தியை காண்பிக்கவும் அவரைப் பற்றி அறியவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் சரியான வகையான பயத்தில் குறைவுபடுகிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். அதன் பிறகு சத்துருவானவனின் திட்டம் அவர்களது மனதில் பயத்தை ஏற்படுத்துவதாகும்.

எல்லா புறஜாதி ஜனங்களிலும் இதைக் காண்கிறோம். தேவனைப் பற்றிய கொஞ்ச அறிவை அவர்கள் பெற்றவுடனேயே அன்பை நீக்கி பயத்தை ஏற்படுத்துகிற அடிமைத்தன பயத்தை உண்டாக்குகிறான். "இப்பிரபஞ்சத்தின தேவனானவன் அவர்களது மனதை குருடாக்கினான்" என்று நாம் வாசிக்கிறோம். (2 கொரிந்தியர் 4:4) நம்மிடத்தில் காணப்படுகிற அநேக காரியங்களுக்கு இந்த தீமையான செல்வாக்குதான் காரணமாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். புற ஜாதிகள் தெய்வ பயத்தோடு கூடிய பிசாசின் போதனைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. உலகத்தனத்தில் இருக்கக்கூடிய, தேவனைப் பற்றி அறிந்திருக்கக்கூடிய யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயம் உடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் புற ஜாதியாரைக் காட்டிலும் தேவனுடைய குணலட்சணத்தைக் குறித்து அதிக வெளிச்சம் பெற்றிருப்பதால் புற ஜாதியாரைக் காட்டிலும் அவர்கள் குறைவான பயத்தை பெற்றிப்பார்கள்.

### ஒரு குறிப்பிட்ட வகையான பயம் சரியானது

நமது வசனம் கிறிஸ்தவர்களுக்கு பயமே இருக்கக்கூடாது என்று சொல்வதற்காக கொடுக்கப்படவில்லை. இந்த உண்மை முதல் கிறிஸ்தவராகிய நமது கர்த்தரின் அனுபவத்தில் கெத்செமனே தோட்டத்தில் காண்பிக்கப்பட்டது. இந்த காரியத்தைக் குறித்து அப்போஸ்தலர் கூறும் போது அவரது பயத்தில் அவர் கேட்கப்பட்டார் என்று கூறுகிறார். தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணினார்; (எபிரேயர் 5:7) ஆண்டவர் பயந்தார் என்றால் அவரது சீஷர்களும் பயப்பட வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதாவது: "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் உண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல்

பின்வாங்கி போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கடவோம்.” (எபிரேயர் 4:1) இந்த பயத்தை எப்படி நாம் நமது வசனத்தோடு இசைவுபடுத்துவோம். கற்பிக்கப்பட்ட மாபெரும் பாடங்களுக்கு எதிராக இந்த வசனம் சொல்லப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு தம்மை நேசித்த பிதாவானவரிடம் வேண்டுதல் செய்தார். பிதாவானவர் பரிபூரணராக நீதியுள்ளவராக நியாயம் உள்ளவராக இருந்தார் என்பதை அவர் அறிவார். சில தேவைகளை நிறைவேற்றுவதில் குறைவுபடுவோமோ என்று பயந்தார்.

அதே போல நம்மோடும் இருக்கிறது, “தேவன் அன்பாக இருக்கிறார்” என்பதை நாம் அறிவோமாக. (1 யோவான் 4:8) நாம் பயந்து, தேவனை பிரியப்படுத்த ஜாக்கிரதையுடன் இருப்போமாக. நாம் எந்த அளவிலாவது குறைவுபடுவோமோ என்று நாம் பயந்திருக்க வேண்டும். அறியாமை பயத்தை பிறப்பிக்கும். ஆனால் தேவனுக்கான அன்பு பயத்தை விரட்ட நம்மை சாத்தியமாக்குகிறது; நமக்கு தேவனிடம் மிகுந்த நம்பிக்கை வரச் செய்கிறது. ஆகையால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்று முழு நம்பிக்கையுடன் நாம் “அவருடன் சேருவோமாக.” (யாக்கோபு 4:8) இந்த கருத்து புறஜாதி சிந்தைக்கு மிகவும் எதிராக இருக்கிறது. தேவனைப்பற்றிய அவர்களது கருத்து பிசாசுக்குரியது. மறுபுறம் ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கும் கிறிஸ்தவர்கள் தேவனை நேசிக்கவும் பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்யவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். அன்பினால் தூண்டப்படாத எந்த பலியும் ஏற்புடையதல்ல. “தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று பிதாவானவர் விரும்புகிறார்.” (யோவான் 4: 23, 24)